Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி
2

வருடாந்திர
சந்தா
ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly
BADAR Qadian
TAMIL

இதழ்
34

ஆசிரியர்
முஸ்ஸம்மில்
அஹ்மது

துணை
ஆசிரியர்
ரஃபீக்
அஹ்மது

1 துல்ஹஜ் 1438 ஹிஜ்ரி கமரி　24 ஸஹூர் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
24 ஆகஸ்டு 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து–லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் இந்த இல்ஹாம்களின் மீது திருக்குர்ஆன் மீதும், இறைவனின் மற்ற வேதங்களின் மீதும் ஈமான் கொள்வதைப் போன்று ஈமான் கொள்கிறேன். மேலும் நான் திருக்குர்ஆனை உறுதியாகவும் திடமாகவும் இறைவனின் கூற்று என நம்புவதைப் போன்றே எனக்கு இறங்கும் கூற்றையும் இறைவனின் கூற்று என உறுதி கொள்கிறேன். ஏனென்றால் அத்துடன் இறை பிரகாசத்தையும் ஒளியையும் நான் காண்கின்றேன். மேலும் அத்துடன் இறைவனின் வல்லமைகளின் முன்மாதிரியை நான் பார்க்கின்றேன்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் இப்போது எழுதியிருப்பது போன்று 22 -வது அடையாளம் இதுவாகும். எனது தந்தையார் சூரியன் அஸ்தமித்த பிறகு மரணித்து விடுவார்கள் என்ற செய்தி எனக்கு தெரிவிக்கப்பட்டபோது மனித எதிர்பார்ப்பிற்கேற்ப இந்த செய்தியைக் கேட்டதும் எனக்கு வேதனை ஏற்பட்டது. எங்களது வாழ்விற்கான பெரும்பாலான காரணிகள் அவர்களது வாழ்க்கையுடன் தொடர்புடையனவாக இருந்தன. ஆங்கிலேய அரசின் தரப்பிலிருந்து அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைத்தது. மேலும் ஒரு பெருந்தொகையை வெகுமதியாகவும் அவர்கள் பெற்று வந்தார்கள். அது அவர்கள் உயிருடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தது. எனவே, அவர்களது மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்ற எண்ணம் உள்ளத்தில் தோன்றியது. ஒருவேளை வறுமை மற்றும் துன்பத்தின் நாட்கள் நம் மீது வரலாம் என்ற அச்சம் உள்ளத்தில் உருவானது. இந்த எல்லா எண்ணமும் மின்னல் பிரகாசிப்பது போன்று ஒரு நொடிப்பொழுதை விடவும் குறைந்த நேரம் வரை உள்ளத்தில் தோன்றியது. அப்போது மயக்க நிலை ஏற்பட்டு اَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ என்ற இன்னோர் இல்ஹாம் வந்தது. அதாவது, அல்லாஹ் தனது அடியானுக்குப் போதுமானவன் இல்லையா ?

கடுமையான வேதனையுள்ள ஒரு காயம் ஒரு மருந்தினால் ஒரு நொடிப்பொழுதில் சரியாகி விடுவதைப்போன்று இந்த இறையறிவிப்பினால் உள்ளம் உறுதியாகி விட்டது. இறையறிவிப்பில் உள்ளத்திற்கு ஆறுதல் கூறுவதற்கான ஒரு தனிப்பட்ட சிறப்புத்தன்மை இருக்கிறது என்பது உண்மையில் பலமுறை சோதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சிறப்புத் தன்மையின் வேர் இறையறிவிப்பின் மீது இருக்கும் நம்பகத்தன்மையாகும். அந்தோ ! தமக்கு இல்ஹாம் இறங்குவதாக வாதம் செய்தபோதிலும், தமது இந்த இல்ஹாம் யூகங்களாகும்; இவை ஷய்த்தானிய இல்ஹாம்களா ? அல்லது ரஹ்மானின் இல்ஹாம்களா ? என்பது எங்களுக்குத் தெரியாது என்று கூறுபவர்களின் இல்ஹாம்கள் எப்படிப்பட்டவை ? அப்படிப்பட்ட இல்ஹாம்களின் தீங்கு அவற்றின் நன்மையை விட அதிகமானதாகும். ஆனால் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் இந்த இல்ஹாம்களின் மீது திருக்குர்ஆனின் மீதும், இறைவனின் மற்ற வேதங்களின் மீதும் ஈமான் கொள்வதைப் போன்று ஈமான் கொள்கிறேன். மேலும் நான் திருக்குர்ஆனை உறுதியாகவும் திடமாகவும் இறைவனின் கூற்று என நம்புவதைப் போன்றே எனக்கு இறங்கும் கூற்றையும் இறைவனின் கூற்று என உறுதி கொள்கிறேன். ஏனென்றால், அதனுடன் இறை பிரகாசத்தையும் ஒளியையும் நான் காண்கின்றேன். மேலும் அதனுடன் இறைவனின் வல்லமைகளின் முன்மாதிரியை நான் பார்க்கின்றேன்.

சுருக்கமாக, اَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ என்ற இல்ஹாம் எனக்கு வந்ததும் அதே சமயத்தில் இறைவன் என்னை வீணாக்க மாட்டான் என நான் புரிந்து கொண்டேன். அப்போது நான் காதியானில் வசித்து வருகின்ற மலாவாமல் என்ற பெயரையுடைய கதிரி இனத்தைச் சேர்ந்த இந்து ஒருவரிடம் அந்த இல்ஹாமை எழுதிக் கொடுத்தேன். அவர் இப்போது வரை உயிருடன் இருக்கின்றார். நான் அவரிடம் எல்லா விஷயங்களையும் கூறினேன். ஹகீம் மவ்லவி முஹம்மது ஷரீஃப் கலாநூரி அவர்கள் மூலமாக அந்த இல்ஹாமை ஏதாவதொரு கல்லில் பதித்து மோதிரமாக செய்து கொண்டு வருவதற்காக அவரை அமிர்தசரஸிற்கு அனுப்பி வைத்தேன். அவர் இந்த மகத்தான முன்னறிவிப்பிற்கு சாட்சியாக இருக்க வேண்டும். மேலும் மவ்லவி முஹம்மது ஷரீஃப் சாஹிப் அவர்களும் இதற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டுமே அந்த இந்துவை இந்தப் பணியைச் செய்ய வைத்தேன்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 123 -வது காதியான் ஆண்டு மாநாட்டை 2017 டிசம்பர் 29, 30 மற்றும் 31 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக ஆயத்தமாகும் பணிகளை செய்ய ஆரம்பித்து விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அல்லாஹ்வுக்காக இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அருள்களைப் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாவதற்காகவும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கு காரணமாக இருப்பதற்கும் சகோதரர்கள் அனைவரும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ். (தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத், காதியான்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மாநாட்டின் நிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாக அஹ்மதிகள் ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கு முயற்சி செய்யவும், கற்கவும் வருகிற அதே வேளையில் பிற ஜமாஅத்களைச் சார்ந்த விருந்தினர்களும், பத்திரிகையாளர்களும் கூட அறிவு மற்றும் கொள்கை சார்ந்த போதனைகளைக் கேட்பதுடன் பொதுவாக மாநாட்டின் சூழல் மற்றும் அஹ்மதி ஆண் பெண்களின் தன்னார்வத் தொண்டு, விருந்தோம்பலின் உணர்வுடன் அவர்கள் செய்யும் பணிகளைப் பார்த்து இஸ்லாத்தின் அழகிய போதனையினை செயல் ரீதியாகவும் கண்டு கொள்கின்றனர். நான் ஏற்கனவே கூறியதுபோன்று இது மிகப் பெரும் தப்லீகின் வழியாகும். ஆகவே தன்னார்வத் தொண்டர்களின் பங்கு மிகப் பெரியதாகும். ஊழியர்கள் எந்த நிலையிலிருந்து பணி செய்தாலும் அவர்களுக்கென ஒரு முக்கியத்துவம் இருக்கவே செய்கிறது. அந்த முக்கியத்துவத்தை ஒத்துழைப்பு பணியில் இருக்கின்ற ஒரு சாதாரண ஊழியரிலிருந்து அதிகாரிகள் வரை ஒவ்வொருவரும் கண்முன் நிறுத்த வேண்டும்.

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். விருந்தோம்பல் மிக முக்கிய துறையாகும். விருந்தோம்பல் என்பது உணவு வழங்கல் தண்ணீர் புகட்டுதல் அல்லது அதிகமதிகம் தங்குமிடங்களை ஏற்பாடு செய்து தருதல் என்ற அளவில் மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, ஆண்டு மாநாட்டின் ஒவ்வொரு துறையும் விருந்தோம்பலே ஆகும். அதற்கு வேறு என்ன பெயர் வழங்கப்பட்டிருந்தாலும் சரியே. மாநாட்டிற்கு எவர் வருகிறாரோ அவர் விருந்தினராவார். அவரது தேவைகளைக் கருத்தில் கொள்வது, அதுவும் நமக்கு கிடைத்துள்ள வசதிகளைப் பொருத்து கருத்தில் கொள்வது ஆகியவை மாநாட்டில் எந்த பொறுப்பில் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அது அவசியமாகும்.

விருந்தோம்பலில் மிக உயரிய தரத்தை நிலைநாட்டுவதற்கு ஒவ்வொரு துறையின் அதிகாரிகளும் தமது நிலையை ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். பணிவு மற்றும் தாழ்மைக் குணத்தை அதன் உச்சத்திற்கே எடுத்துச் செல்ல வேண்டும்.

எவர்கள் தாம் தூங்குவதற்குரிய ஏற்பாட்டை செய்தவாறு பொருள்களை எடுத்து வருகின்றார்களோ - கூடாரத்தை எடுத்து வருகிறார்களோ அவர்கள் இரவில் படுக்கைக்கான சிறந்த ஏற்பாட்டை சுயமே செய்து கொள்ள வேண்டும் என்பதை கண்முன் நிறுத்த வேண்டும்.

ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கிற ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளியாவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளியாக இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு விருந்தாளியையும் நாம் சிறப்பு விருந்தாளியாகவே கருத வேண்டும். அவருக்கு விருந்தோம்பல் செய்வதற்கு நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு துறையின் அதிகாரிகளும் தமது துறையின் சம்பந்தப்பட்ட குறைபாடுகளைப் பார்ப்பதற்காக சிலரை டியூட்டியில் அமர்த்த வேண்டும். அவர்கள் தத்தமது பிரிவின் குறைபாடுகளை ஆய்வு செய்து மாலையில் தமது அதிகாரிக்கு ரிப்போர்ட் தர வேண்டும். இது மாநாட்டின்போதும் வரும் ஆண்டுகளில் நடைபெறும் மாநாடுகளிலும் சிறந்த நிலையை உருவாக்குவதில் உதவி செய்யும்.

ஆண்டு மாநாட்டிற்கு வருகை தருகின்ற விருந்தினர்களுக்குத் தொண்டு செய்வது தொடர்பாக நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஊழியர்களுக்கும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள மிக முக்கியமான போதனைகள்

ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்களின் மகனான மதிப்பிற்குரிய செய்யது முஹம்மது அஹ்மது சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது சித்தீக் பட்டி சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய மஹ்மூதா பேகம் சாஹிபா அவர்களும் வஃபாத்தாகி விட்டனர். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 21 ஜுலை 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **21 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்லாஹ்வின் அருளால் பிரிட்டனின் ஆண்டு மாநாடு அடுத்த ஜுமுஆவிலிருந்து ஆரம்பமாகிறது – இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் அருளால் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிற நாடுகளிலிருந்து விருந்தாளிகளின் வருகை தொடங்கி விட்டது. மாநாட்டின் நாட்கள் நெருங்க நெருங்க அருகிலும் தூரத்திலும் உள்ள நாடுகளிலிருந்து வரும் விருந்தாளிகளின் எண்ணிக்கை அதிகமாகத் தொடங்கும். இவ்வாறு பிரிட்டனின் பிற நகரங்களிலிருந்தும் விருந்தாளிகள் வரத் தொடங்கி விடுவர். மாநாட்டின் விருந்தாளிகளுள் அஹ்மதிகள் தவிர மாநாட்டின் பரக்கத்திலிருந்து அருள் பெறுவதற்காக பிறரும் வருகின்றனர். இப்போது பிரிட்டனைத் தவிர மற்ற சில நாடுகளிலிருந்தும் ஜமாஅத் அல்லாதவர்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் கூட வருகின்றனர். அவர்களில் சில நாடுகளின் அரசுப் பிரதிநிதிகளும் அரசாங்க அதிகாரிகளும், படித்த மக்களுள் செல்வாக்கு மிக்கவர்கள் மற்றும் பிற ஊடகத்தைச் சார்ந்தவர்களின் வருகையும் கூட இப்போது அதிகமாகத் தொடங்கி விட்டது. இந்த வருகை தருகின்ற அந்நியர்கள் அனைவரும் மிகவும் ஆழமான கண்ணோட்டத்துடன் நமது ஒவ்வொன்றையும் பார்க்கின்றனர். பொதுவாக அவர்கள் அதனால் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். குறிப்பாக அவர்கள் நமது நிர்வாக அமைப்பைப் பார்க்கின்றனர். அனைத்தும் தன்னார்வத் தொண்டர்களின் அமைப்பால் உள்ளது. இதுவே பிறகு தப்லீகிற்கான வழிகளை மேலும் திறக்கிறது. அத்துடன் அறிமுகமும் ஏற்படுகிறது. தொடர்ந்து அஹ்மதிய்யத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் முயற்சி செய்கின்றனர். ஆகவே இந்த நாட்களில் நம்முடைய பணி செய்கின்ற தன்னார்வத் தொண்டர்களாகிய ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், குழந்தைகள் அனைவரும் ஒரு மவுனமான தப்லீக் செய்பவர்களாக இருக்கின்றனர். பிரஸ் மூலமாகவும் உலகின் தூர தூர பகுதிகளுக்கு பரந்த அளவில் அஹ்மதிய்யத்தின் அறிமுகம் பரவுகிறது. சில சமயங்களில் சாதாரண நாட்களிலும் கூட சில சம்பவங்களின் காரணத்தால் பத்திரிகைகளின் கவனம் ஜமாஅத் மீது ஏற்படுகிறது. உதாரணமாக இங்கு ஐரோப்பாவில் சில வன்முறை சம்பவங்களுக்குப் பிறகு ஜமாஅத் மக்களுள் பெண்கள் உட்பட இஸ்லாம் பற்றிய சரியான போதனையை எடுத்து வைக்க முயன்றபோது இதில் நமது செய்திப் பிரிவும் முக்கிய பங்கு வகித்துள்ளது. அதில் நமது கொள்கை பரப்புனர்களின் பெரிய நேர்காணல்கள் கூட வந்து கொண்டிருந்தால் ஜமாஅத்தை இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனையின் அடிப்படையில் பத்திரிகைகள் உலகில் பரந்த அளவில் அறிமுகம் செய்து வைத்தன. எங்கெல்லாம் இந்த சம்பவங்கள் நடந்தனவோ அங்கெல்லாம் ஜமாஅத்தின் அறிமுகமும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

எவ்வாறிருப்பினும் மாநாட்டில் நாட்களிலும் கூட இதன் மூலம் அதாவது மாநாட்டின் மூலமாக ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைப்பதற்கான பரந்த ஏற்பாட்டை செய்கிறான். மாநாட்டின் நிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாக அஹ்மதிகள் ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கு முயற்சி செய்யவும், கற்கவும் வருகிற அதே வேளையில் பிற ஜமாஅத்களைச் சார்ந்த விருந்தினர்களும், பத்திரிகையாளர்களும் கூட அறிவு மற்றும் கொள்கை சார்ந்த போதனை –களைக் கேட்பதுடன் பொதுவாக மாநாட்டின் சூழல் மற்றும் அஹ்மதி ஆண் பெண்களின் தன்னார்வத் தொண்டு, விருந்தோம்பலின் உணர்வுடன் அவர்கள் செய்யும் பணிகளைப் பார்த்து இஸ்லாத்தின் அழகிய போதனையினை செயல்ரீதியாகவும் அவர்கள் கண்டு கொள்கின்றனர்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று இது மிகப் பெரும் தப்லீகின் வழியாகும். ஆகவே தன்னார்வத் தொண்டர்களின் பங்கு மிகப் பெரியதாகும். ஊழியர்கள் எந்த நிலையிலிருந்து பணி செய்தாலும் அவர்களுக்கென ஒரு முக்கியத்துவம் இருக்கவே செய்கிறது. அந்த முக்கியத்துவத்தை ஒத்துழைப்பு பணியில் இருக்கின்ற ஒரு சாதாரண ஊழியரிலிருந்து அதிகாரிகள் வரை ஒவ்வொரு–வரும் கண்முன் நிறுத்த வேண்டும். ஒரு சாதாரண உதவியாளர் தண்ணீர் புகட்டுகின்ற ஒரு சாதாரண சிறுவராகவே இருக்கட்டும். அவரது நடைமுறை மற்றும் ஒரு பிடிப்புடன் தன்னலமற்ற பணி செய்வது ஆகியவை அல்லாஹ்வுடைய மகிழ்ச்சியை அவர்கள் பெறுவதற்குக் காரணமாக இருக்கிற அதே வேளையில் அது அன்னியர்களையும் கூட தாக்கத்திற்கு உள்ளாக்குகிறது. அதனை மாநாட்டில் கலந்து கொள்ளும் விருந்தினர்கள் வெளிப்படுத்தவும் செய்கின்றனர்.

அதே போன்று ஊழியர்கள் தவிர அதிகாரிகள் கூட நினைவில் கொள்ள வேண்டும். தமது ஊழியர்கள் மற்றும் உதவியாளர்களை மட்டுமே தொண்டு செய்பவர்களாகக் கருதி அவர்களிடம் மட்டும் வேலை வாங்க வேண்டாம். மாறாக தாமே ஓர் உதவியாளர் அல்லது ஊழியர் என்று கருதி வேலை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். தமது ஊழியர்களிடமும் பிற மக்களிடமும் தமது நடைமுறையை மென்மை –யாகவும் ஒத்துழைப்பு நல்குவதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். முகத்தில் எளிமை மற்றும் மென்மையின் தாக்கம் தென்பட வேண்டும். நாவிலும் மென்மையும் நல்லொழுக்கத்தின் உயர் தரமும் நிலைநாட்டப்பட வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். விருந்தோம்பல் மிக முக்கிய துறையாகும். விருந்தோம்பல் என்பது உணவு வழங்கல் தண்ணீர் புகட்டுதல் அல்லது அதிகமதிகம் தங்குமிடங்களை ஏற்பாடு செய்து தருதல் என்ற அளவில் மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, ஆண்டு மாநாட்டின் ஒவ்வொரு துறையும் விருந்தோம்பலே ஆகும். அதற்கு வேறு என்ன பெயர் வழங்கப்பட்டிருந்தாலும் சரியே. மாநாட்டிற்கு எவர் வருகிறாரோ அவர் விருந்தினராவார். அவரது தேவைகளைக் கருத்தில் கொள்வதும், அதுவும் நமக்கு கிடைத்துள்ள வசதிகளைப் பொருத்து கருத்தில் கொள்வது ஆகியவை மாநாட்டில் எந்த பொறுப்பில் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அது அவசியமாகும்.

அதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது உணர்வை ஓரிடத்தில் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்கள்: இது நமது நிர்ணயிக்கப்பட்ட செயல் திட்டமாகும்.

அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகிறார்கள்: “எனக்கு எப்போதும் எந்த விருந்தாளிக்கும் கஷ்டம் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதற்காக நான் எப்போதும் வலியுறுத்தி வருகிறேன். முடிந்த வரை விருந்தாளி –களுக்கு நிம்மதியை வழங்க வேண்டும்.”

அவர்கள் கூறுகிறார்கள்: “விருந்தாளியின் உள்ளம் கண்ணாடியைப் போன்று நுட்பமானது. சிறிது கஷ்டம் ஏற்பட்டாலும் உடைந்து போகிறது.” (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 406; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே இதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அதுபோன்ற சம்பவங்கள் ஏற்படும்போது நம்மை கஷ்டத்தில் ஆழ்த்தி கூட விருந்தாளிக்கு நிம்மதியை வழங்க முயற்சி செய்ய வேண்டும். நான் ஒவ்வொரு துறையின் அதிகாரிகளிடமும் கூறுவேன். அவர்களின் நடைமுறை மென்மையாக இருக்கும் எனில் அவர்களின் ஒழுக்கம் நல்லதாக இருக்கும் எனில், அவர்களிடம் பொறுமை இருக்கும் எனில், பொருத்தமற்ற வார்த்தைகளைக் கேட்கும் தைரியம் இருக்கும் எனில் அவர்களின் உதவியாளர்களும் அவர்களின் கீழ் பணியாற்று –பவர்களும் அதேபோன்ற நடைமுறையை விருந்தாளிகளிடம் காட்டுவர். விருந்தோம்பலின் உயரிய முன்மாதிரியை நிலைநாட்டுவர். ஆனால் அதிகாரிகளின் முகத்தில் கடுமையும் வார்த்தைகளின் கடுகடுப்பும் பேச்சை ஆழ்ந்து கேட்டு புரிந்து கொள்ளும் வழக்கம் இல்லாமலும் இருந்தால் அவர்களின் உதவியாளர்களும் அவர்களின் கீழ் பணி செய்பவர்களும் அதே நடைமுறையைக் காட்டுபவராகவே இருப்பர். ஆகவே விருந்தோம்பலில் மிக உயரிய தரத்தை நிலைநாட்டுவதற்கு ஒவ்வொரு துறையின் அதிகாரிகளும் தமது நிலையை ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். பணிவு மற்றும் தாழ்மைக் குணத்தை அதன் உச்சத்திற்கே எடுத்துச் செல்ல வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று ஒன்றிரண்டு துறை மட்டும் விருந்தோம்பலுக்குள் வருவதில்லை. மாறாக, ஆண்டு மாநாட்டின் ஒவ்வொரு துறையுமே விருந்தோம்பலின் துறைதான். தங்குமிடத்தைக் கவனிக்கிற துறையாகட்டும்; உணவு சமைக்கிற துறையாகட்டும்; உணவு பரிமாறுகிற ஏற்பாடு ஆகட்டும் அல்லது போக்குவரத்தைச் சரிசெய்கின்ற அமைப்பாக இருக்கட்டும் அல்லது சுத்தம் மற்றும் குளியறை சம்பந்தப்பட்ட ஏற்பாடாக இருக்கட்டும் அல்லது டாக்டர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களை உள்ளடக்கிய உடல் நலத்துறை அமைப்பாக இருக்கட்டும் அல்லது வழிகளைக் காட்டித் தருகிற குத்தாம் அல்லது பிறராகட்டும் அல்லது பாதுகாப்புத் துறையாகட்டும். ஒவ்வொருவரும் அல்லது இது தவிர பிற துறையினர் ஒவ்வொருவரும் தமது வட்டத்தின் விருந்தோம்பல் செய்பவர்களேயாவர். தங்குமிடம் ஏற்பாடு செய்பவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஒருங்கிணைந்த தங்குமிடங்களிலும் சரி, கூடாரங்களிலும், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் படுக்கை வசதிகளைக் குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். சந்தேகமின்றி தற்போது வெயில் காலம் தான். எனினும் இரவில் திடீரென்று குளிர் வந்து விடுகிறது; வந்து விடலாம் – இன்ஷா அல்லாஹ். மாநாடு நடக்கவிருக்கிற ஹதீகத்துல் மஹ்தியில் பொதுவாக இலண்டனை விட 4–5 டிகிரி வெப்பநிலை குறைவாக உள்ளது. எவர்கள் தாம் தூங்குவதற்குரிய ஏற்பாட்டை செய்தவாறு பொருள்களை எடுத்து வருகின்றார்களோ – கூடாரத்தை எடுத்து வருகிறார்களோ அவர்கள் இரவில் படுக்கைக்கான சிறந்த ஏற்பாட்டை சுயமே செய்து கொள்ள வேண்டும் என்பதை கண்முன் நிறுத்த வேண்டும். கடந்த வருட அனுபவம் இதுதான். பருவ நிலை இரவில் குளிர்ந்து விட்டதால் குழந்தைகளை உடையவர்கள் கஷ்டத்திற்குள்ளாகினர்.

அதேபோன்று உணவு பரிமாறுபவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு நேரடியாக விருந்தாளிகளுடன் தொடர்பு இருக்கிறது. அவர்களுக்கு எப்போதும் நினைவூட்டுகிறேன். உணவை தட்டில் இடும்போது விருந்தினரின் விருப்பத்தையும் பார்க்க வேண்டும். இதில் கணிசமான சிரமம் இருந்தாலும் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு அதனையும் தெரிந்து கொண்டு தர முயற்சி செய்யுங்கள். நிர்பந்தமான சூழ்நிலையில் கடுமையான பதில் சொல்வதற்கு பதில் அழகிய முறையில் பதில் கூறுங்கள். கடுமையான வார்த்தையால் மற்றவரது உணர்வுகள் பாதிக்கப்படக் கூடாது. இவ்வருடம் மாநாட்டு ஏற்பாட்டின் கீழ் உணவுத்தட்டுகள் மாற்றப்பட்டுள்ளன. முன்னர் பயன்படுத்தப்பட்ட தட்டுகள் சம்பந்தமாக அதில் அதிக சூடான உணவை வைக்கக் கூடாது என்றும் அதனால் சில நச்சுத்தன்மையுள்ள கெமிக்கல் அதிலிருந்து வெளிப்படுகின்றன என்றும் கூறப்பட்டது. நமது உணவு நன்கு சூடாக இருக்கும். ஆண்டு மாநாட்டின் இன்சார்ஜ் இவ்வருடம் உணவு பரிமாறப்படவிருக்கிற தட்டைக் காண்பித்தார். இது ஒரு சிறப்பு வகை காகிதமாக இருக்கும். எனவே உணவை இடுபவர் எச்சரிக்கையாக இட வேண்டும். ஒருவேளை மெல்லியதாக இருந்தால் இரண்டு பிளேட்டை சேர்த்து வைத்து பயன்படுத்துங்கள். ஆண்டு மாநாட்டு அமைப்பாளர்கள் இவ்வருடம் உணவு பரிமாறுபவர்களுக்கு சரியான வழிகாட்டல் வழங்க வேண்டும். பிறகு போக்குவரத்து ஏற்பாடும் மிக முக்கியமான ஏற்பாடாகும். இம்முறை தூரத்தில் பார்கிங் செய்யப்பட்டிருப்பதால் அதிக அளவில் shuttle பஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆண்டு மாநாட்டின் பொறுப்பாளர்கள் இதனையும் செயற்துடிப்புள்ளதாக்க வேண்டும். அதன் மூலம் மக்கள் குறித்த நேரத்தில் மாநாட்டிற்கு வந்து சேர இயலும். கார்களில் வரும் விருந்தாளிகள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களின் பார்கிங் தூரத்தில் இருக்கலாம். மாநாட்டுத்

திடலை விட்டு நல்ல தூரத்தில் இருக்கலாம். எனவே அதனையும் கருத்தில் கொண்டு புறப்படுங்கள். இதுபோன்று பிற துறைகள் உள்ளன. விருந்தாளிகளுக்கு அதிக அளவில் வசதிகள் செய்து தருவது எப்படி என்ற சிந்தனையுடன் அவர்களுக்கு பணி செய்யும் முறையையும் ஊழியர்களுக்கான பயிற்சியையும் வழங்க வேண்டும்.

படைப்பின சேவை செய்பவர்கள் மற்றும் பாதுகாப்புப் பணி செய்யும் ஊழியர்களும் கூட முன்னரை விட எச்சரிக்கையாக பணி செய்ய வேண்டியதிருக்கும். உலகில் தற்போதைய சூழ்நிலை அவ்வாறு உள்ளது. அத்துடன் விருந்தினர்களின் சுய கவுரவம், மன உணர்வு –களையும் கவனத்தில் கொண்டே எல்லா வேலையும் செய்ய வேண்டும். கார்டு செக்கிங் மற்றும் ஸ்கேனிங் பணிகளில் முதள் நாளிலிருந்து கடைசி நாள் வரை முழு கவனத்துடன் செக்கிங் செய்ய வேண்டும். ஒருவர் வெளியே செல்கிறார் என்றால் உள்ளே வரும்போது ஒவ்வொரு முறையும் சோதனையிட வேண்டும். எனினும் இதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தம்மையேதான் இவர் கவனிக்கிறாரோ என்றும் அல்லது தாம் தவறாக நடத்தப்படுகிறோம் என்று அவருக்கு எண்ணம் வந்து விடக் கூடாது.

எவ்வாறிருப்பினும் மாநாட்டின் ஏற்பாடுகள் தற்காலிகமாக செய்யப்படுபவைதான். இதனை நான் நன்றாக உணர்கிறேன். தற்காலிக ஏற்பாடுகள் ஒருபோதும் தவறுகள் மற்றும் குறைபாடுகள் இல்லாமல் இருக்க முடியாது. இன்னும் சொல்வதாயின், நிரந்தர ஏற்பாடுகளில் கூட குறைபாடுகளும் தவறுகளும் உருவாகி விடுகின்றன. ஆனால் நாம் முயற்சி செய்ய வேண்டும். எந்த அளவுக்கு நமது திறமைகளைத் தகுதிகளைப் பயன்படுத்தி விருந்தினர்களுக்கு வசதிகளைச் சென்று சேர்க்க ஏற்பாடு செய்ய முடியும் என்று யோசிக்க வேண்டும். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கிற ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளியாவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உடைய விருந்தாளியாக இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு விருந்தாளியையும் நாம் சிறப்பு விருந்தாளியாகவே கருத வேண்டும். அவருக்கு விருந்தோம்பல் செய்வதற்கு நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஆண்டு மாநாட்டின் ஏற்பாட்டின் கீழ் ஒரு துறை, கண்காணிப்புத் துறை என்றும் உள்ளது. பல்வேறு துறைகளை இந்த துறையின் ஊழியர்கள் கண்காணித்து குறைபாடு –களை தமது அதிகாரிகள் மூலமாக ஆண்டு மாநாட்டு அமைப்பிற்கு கவனமூட்டுகின்றனர். ஆனால் ஒவ்வொரு துறையின் அதிகாரிகளும் தமது துறையின் சம்பந்தப்பட்ட குறைபாடுகளைப் பார்ப்பதற்காக சிலரை டியூட்டியில் அமர்த்த வேண்டும். அவர்கள் தத்தமது பிரிவின் குறைபாடுகளை ஆய்வு செய்து மாலையில் தமது அதிகாரிக்கு ரிப்போர்ட் தர வேண்டும். இது மாநாட்டின்போதும் வரும் ஆண்டுகளில் நடைபெறும் மாநாடுகளிலும் சிறந்த நிலையை உருவாக்குவதில் உதவி செய்யும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு ஆய்வு செய்வதற்கு கவனமூட்டியவாறு ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: “லங்கரின் (உணவகத்தின்) அமைப்பாளர் விருந்தாளிகளின் தேவைகளை ஆய்வு செய்து வர வேண்டும். ஆனால் அவரோ தனி மனிதர். எனவே சில நேரங்களில் கவனம் இருக்காது. சில விஷயங்கள் அவரது பார்வையிருந்து தப்பி விடலாம். எனவே இன்னொருவர் நினைவூட்ட வேண்டும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 220; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நினைவூட்டு –வதற்கு மிகச் சிறந்த வழி தாமே நினைவூட்டு –வதற்காக ஒருவரை நியமிக்க வேண்டும். எங்கெங்கு குறைவு உள்ளது என்று அவர் ஆய்வு செய்ய வேண்டும். பணக்காரர் ஏழை எல்லாரையும் ஒன்றுபோல் விருந்தோம்பல் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்காக சில சின்னஞ்சிறிய விஷயங்களையும் கவனமூட்டியுள்ளார்கள். மிகவும் நுட்பமாக விருந்தோம்பலை புரிய வைத்துள்ளார்கள். இந்த வகையில் ஒருமுறை அவர்கள் கூறினார்கள்: வரக்கூடிய விருந்தினர்கள் புதியவர்கள், தெரியாதவர்கள்ஆவர். இங்கும் கூட சில புதிய விருந்தினர்கள் பல நாடுகளிலிருந்து வருகின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்களின் ஒவ்வொரு தேவையையும் கவனத்தில் கொள்வது நமது கடமையாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில வேளைகளில் சிலருக்கு கழிப்பிடமும் தெரியாமல் இருக்கிறது. இதனால் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே விருந்தினர்களின் தேவையைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

அன்னார் கூறினார்கள்: “எவர்களை இந்த வேலைக்கான பிரதிநிதிகளாக நியமிக்கப் –பட்டுள்ளதோ அவர்களின் கடமையாவது எந்தவொரு புகாரும் வரவிடக் கூடாது. ஏனெனில் மக்கள் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மைல் பயணம் செய்து உண்மை மற்றும் கலப்பற்ற தன்மையுடன் உண்மையை ஆய்வு செய்யும் பொருட்டு வருகின்றனர்.” (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 220; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்த விஷயங்களை அன்னார் அன்னியர்களை கவனத்தில் கொண்டு கூறியிருந்தாலும் நம்மவருக்கும் விருந்தோம்பல் பற்றியும், மாநாட்டின் விருந்தோம்பல் பற்றியும் வழிகாட்டல் கிடைக்கிறது. அவ்விடங்களில் அன்னார் மிகவும் கவனமூட்டியுள்ளார்கள். பிறகு நான் ஏற்கனவே கூறியதுபோன்று அன்னிய ஜமாஅத் அல்லாத விருந்தினர் அல்லது பத்திரிகையின் பிரதிநிதிகள் இருக்கின்றனர். இவர்கள் பொதுவான நமது நடவடிக்கைகளையும் ஆய்வு செய்கின்றனர். எனவே, ஒவ்வொரு துறையின் ஊழியர்களின் நல்லொழுக்கத்தின் தரம் மிகவும் பரந்ததாக இருக்க வேண்டும்.

பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: “எனது நியதிப்படி ஒரு விருந்தாளியின் கடுமையான நடைமுறை–யையும் கூட சகித்துக் கொள்ள வேண்டும். அவர் ஏசிப் பேசுகின்ற நிலை வரை சென்று விட்டாலும் சரியே.” (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 91; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அவர்கள் அன்னியராகவோ நம்மவராகவோ இருந்தாலும் சரியே.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தோம்பலின் தரத்தை எழுதியவாறு ஒருமுறை இவ்வாறு குறிப்பிடப்–பட்டுள்ளது: “அஃலா ஹஸ்ரத் ஹுஜ்ஜத்துல்லாஹ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தோம்பல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய விருந்தோம்பலின் உயரிய உயிருள்ள முன்மாதிரியாகும்.”

இவர் எழுதுகிறார்: “அன்னாருடன் அதிக அளவில் நெருங்கி இருந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒருவர் அஹ்மதியாக இருந்தாலும் சரி அவருக்கு விருந்தோம்பலில் சிறு கஷ்டம் ஏற்பட்டாலும் அன்னாருக்கு அது மிகவும் கஷ்டத்தை ஏற்படுத்தியது. தூய அன்பர்களைப் பொருத்தவரை அவர்களுக்காக அவர்களின் ஆன்மாவில் இன்னும் அதிகமாகவே எழுச்சியும் பரிவும் ஏற்பட்டது.” (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 101; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப் -பட்டது) இந்த எழுச்சியையும் பரிவையும் நாம் மாநாட்டிற்கு வருகிற விருந்தாளிகளுக்காக நாம் காட்ட வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விருந்தாளியை கண்ணியப்படுத்து–வதன் முக்கியத்துவத்தைக் குறித்து கூறினார்கள்.

இது சம்பந்தமாக ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் மற்றும் இறுதி நாளின் மீது ஈமான் கொள்வதற்கு மூன்று காரியங்களைச் செய்வது அவசியமாகும். ஒன்று நல்லதைக் கூற வேண்டும் அல்லது அமைதியாக இருக்க வேண்டும். தமது பக்கத்தில் இருப்பவரை மதிக்க வேண்டும். மூன்றாவது தம்முடைய விருந்தாளி –களைக் கண்ணியப்படுத்த வேண்டும். (ஸஹீஹ் முஸ்லிம் பாபு ராஹத் அலா இக்ராமில் ஜாரி வஸ்ஸய்ஃபி ஹதீஸ் 173) விருந்தாளிகளைக் கண்ணியப்–படுத்துவது அல்லாஹ் மற்றும் இறுதி நாளின் மீது ஈமான் கொள்வதற்கான நிபந்தனைகளுள் ஒரு நிபந்தனையாகும். இது அல்லாமல் இன்னும் நிறைய நிபந்தகைள் உள்ளன.

ஒரு முஃமின் உடைய ஈமானின் உயரிய தரத்தை எய்துவதற்கு விருந்தோம்பலும் ஒரு நிபந்தனை என்று நாம் கூறலாம். விருந்தோம்பல் தொடர்பாக நான் இதனையும் கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விருந்தாளிகளின் மார்க்க நிலையை மேம்படுத்துவது மற்றும் தர்பிய்யத்தையும் கவனத்தில் கொண்டார்கள்.

இந்த வகையில் ஓர் அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் விருந்தாளிகளுக்கு உணவு உண்ணச் செய்த பிறகு அவர்களை அவர்களின் விருப்பத்திற்கேற்ப பள்ளியில் தங்குவதற்கு அனுப்பினார்கள். ஃபஜ்ர் தொழுகை வேளையில் அனைவரையும் எழுப்பினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 351-352 ஹதீஸ் 15628 அறிவிப்பாளர்: துஃபத் பின் கெய்ஸுல்

க.்.ப்பாரி. பைருத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1988 -ல் அச்சிடப்பட்டது) மாநாட்டில் தர்பிய்யத் பிரிவு இருக்கிறது. அதுவும் இதற்காகவே நிறுவப்பட்டுள்ளது. அவர்கள் விருந்தாளிகளுக்கு தொழுகையைப் பற்றி கவனமூட்டி வாருங்கள். ஃபஜ்ர் மற்றும் தஹஜ்ஜுத்திற்காக எழுப்புங்கள். ஆனால் மென்மை மற்றும் அன்புடன் இதை செய்யுங்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த சில கருத்துக்களை விருந்தாளிகள் தொடர்பாக நான் கூறினேன். அல்லாஹ் எல்லா ஊழியர்களுக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளுக்கு நல்ல முறையில் தொண்டாற்ற வாய்ப்பு வழங்குவானாக.

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய செய்யது முஹம்மது அஹ்மது சாஹிப் உடையதாகும். இவர்கள் டாக்டர் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்களுடைய மகனாவார். இவர் 13 ஜுலை 2017 அன்று தமது 92 –வது வயதில் லாஹூரில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்கள் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் உடைய மூத்த மகனாவார்கள். உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் அம்மா ஜான் இவர்களது மாமி ஆவார்கள். இவர்களது திருமணம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களுடைய சிறிய மகளுடன் நடந்தது. இவ்வாறு இவர் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் சிறிய மருமகனாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் இரண்டு திருமணங்கள் செய்திருந்தார்கள். முதல் திருமணம் ஹஸ்ரத் ஷவ்கத் சுல்தான் சாஹிபாவுடன் 1906 –ல் நடந்தது. இவர்களுக்கு குழந்தை இல்லை. இரண்டாவது திருமணம் அமத்துல் லதீஃப் பேகம் சாஹிபாவுடன் 1917 –ல் நடந்தது. இவர் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் கணக்கராக இருந்த ஹஸ்ரத் மிர்ஸா முஹம்மது ஷஃபீ சாஹிப் தெஹ்லவியின் மகளாவார். அல்லாஹ்வின் அருளால் அவர் மூலமாக அவர்களுக்கு 7 மகள்களும், 3 மகன்களும் பிறந்தனர். காதியானில் மீர் முஹம்மது அஹ்மது சாஹிப் 1939 –ல் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். பிறகு லாஹூர் அரசுக் கல்லூரியில் B.Sc. தேர்வு எழுதினார்.

பிறகு 1943 –ல் ராயல் இண்டியன் Air force –ல் Flight Cadet ஆக சேர்ந்தார். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபின் மகளான இவரது துணைவியாரான கண்ணியத்திற்குரிய அமத்துல் லதீஃப் சாஹிபா அவர்களுக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். ஒரு மகன் ஹாஷிம் அக்பர் சாஹிப் இங்கு ஹாட்லேபூலின் ஜமாஅத் தலைவர் ஆவார். ஒரு மகள் டாக்டர் ஆயிஷா. இவர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள். இவர்கள் தாமே ஒருமுறை அனுபவங்களை எழுதுகிறார்கள். இரண்டாவது உலகப் போரில் போர் விமானத்தின் பைலட்டாக இங்கிலாந்து சார்பாக போரில் இவர்களும் கலந்து கொண்டார்கள். போரின் போது பர்மா நுழைவுப் பகுதியில் 1945 –ல் இவரது விமானத்தை அவசரமாக தரையிறக்கம் செய்ய வேண்டியது வந்தபோது விமானம் சேதமுற்று அழிந்து விட்டது. இவர்கள் அற்புதமான முறையில் பாதுகாப்பாக இருந்தார்கள். பிறகு 1947 –ல் இவர்களுக்கு Civil Aviation Department –க்கு Transfer ஆனது. Indian National Air Ways ல் Flying Duty செய்து வந்தார்கள். 1947 –ல் நிலைமை மோசமாக இருந்தது. இதே வருடத்தில் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிபின் வஃபாத் நிகழ்ந்தது. ஆனால் சூழ்நிலை காரணமாக அன்னார் ஜனாஸாவுக்கு வர முடியவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு காதியான் வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்கு வரலாற்று அடிப்படையில் ஜமாஅத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் இவ்வாறாகும். இவர்கள் Air Force –ல் இருந்தபோது இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது முஸ்லிஹ் மவ்வூது இரண்டு சிறிய விமானங்களை வாங்கினார்கள். பைலட் தேவைப்பட்டது.

அவர் கூறுகிறார்: எனக்கு இரவில் தூதுச் செய்தி கிடைத்தது. மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் என்னை உடனே வருமாறு அழைத்தார்கள். அப்போதே காதியானுக்குப் புறப்பட்டார்கள். மூன்றாவது கலீஃபாவாகிய ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது சாஹிப் அப்போது சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருந்தார்கள். அவர்கள் அந்த விமானத்திற்குப் பொறுப்பாளராக இருப்பார்கள் என்றும் அவருக்கு கீழ் வேலை செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. எவ்வாறிருப்பினும் அதன் மூலமாக அவர் அதிகமான பொருள்களைப் பாகிஸ்தானுக்குக் கொண்டு வந்தார். இதில் ஒரு சுவையான சம்பவத்தை அன்னார் எழுதியுள்ளார்கள். அது என்னவெனில் அது மிகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவமும் முக்கியமானதும் ஆகும்.

ஒருநாள் காலையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் என்னை கிலாஃபத் கட்டடத்திற்கு அழைத்து என்னிடம் கூறினார்கள். உம்மிடம் மிகவும் விலை மதிப்புள்ள பொருளைத் தருகிறேன். அதனை லாஹூர் எடுத்துச் சென்று ஷேக் பஷீர் அஹ்மது சாஹிபிடம் ஒப்படைக்க வேண்டும். அந்தப் பொருளைப் பாதுகாப்பாக வைப்பதற்காக நீங்கள் ஷேக் அஹ்மது சாஹிபிடம் இதே வார்த்தையில் கூற வேண்டும். மேலும் அதைக் கொடுத்து விட்டு ரசீதும் வாங்கி திரும்பி வந்து என்னிடம் தர வேண்டும்.

மீர் சாஹிப் கூறுகிறார்: நான் அந்த அளவுக்கு பக்குவமற்றவனாக இருந்தேன். அப்போது எனது எண்ணத்தில் வந்தது. ஹுஸூர் என்னிடம் ஜமாஅத்தின் ஏதோ கருவூலப் பெட்டி தரப்போகி –றார்கள். வைரங்கள் மணிகள் தரப்போகிறார்கள். அதனை எடுத்துச் செல்ல வேண்டும் என்று நினைத்தேன். பிறகு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் தமது இடத்திலிருந்து எழுந்தார்கள். ஒரு தூசு படிந்த டிராவல் பேக்கை எடுத்தார்கள். பேக்கின் சில இடங்களில் கிழிந்தும் இருந்தது. மேலிருந்த ஜிப்பும் கிழிந்திருந்தது. முழுவதும் காகிதங்களால் நிறைந்திருந்தது. அன்னார் அந்த பேக்கை என் முன் வைத்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: என்னால் எழுதப்பட்ட திருக்குர்ஆன் விளக்கங்களின் சில பகுதிகள் அச்சில் வந்து விட்டன. சில பகுதிகள் எழுதப்பட்டு விட்டது. ஆனால் இன்னும் அச்சில் வரவில்லை. ஆனால் இன்னும் நிறைய பகுதிகள் எழுத வேண்டியது எஞ்சியுள்ளது. இந்த விரிவுரையை முழுமைப்படுத்துவது எனது வாழ்வின் முக்கிய பணியாகும். எனவே இரவிலோ பகலிலோ போகும்போதும் வரும்போதும் பணி செய்யும்போதும் திருக்குர்ஆனில் ஏதாவது வசனம் பற்றி எனது மனதில் ஒரு புதிய கருத்து தோன்றினால் அந்த கருத்தை ஒரு சாதாரண காகிதத்தில் எழுதி இந்த பையில் பாதுகாத்து வைக்கிறேன். அவற்றை தேவையான நேரத்தில் பயன்படுத்துவதற்காக அவ்வாறு செய்கிறேன். இந்த எழுதப்பட்ட காகிதங்களில் உள்ள குறிப்புகளில் வரிசைக்கிரமம் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் இது என்னைப் பொருத்தவரையில் மிகவும் பயனுள்ளதாகும்.

மீர் சாஹிப் கூறுகிறார்: ஹுஸூரிடமிருந்து பேக்கை வாங்கி பாதுகாப்பாக வைத்து லாஹூருக்கு எடுத்துச் சென்றேன். அங்கு சென்று ஷேக் பஷீர் சாஹிபை விமான நிலையத்திலிருந்து ஃபோன் செய்து கூப்பிட்டு அவரிடம் பையை ஒப்படைத்து ரசீதும் வாங்கினேன். இது மிகவும் பெரிய சம்பவமாகும். இது ஒரு வரலாற்றுச் சம்பவமாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் சிறப்பாக கவனமூட்டித் தந்த அந்த அன்னாரது மதிப்பு வாய்ந்த குறிப்புகளை அன்னார் எடுத்துச் சென்ற சம்பவமாகும் இது.


**திருக்குர்ஆனிலிருந்து...**

*உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மனிதன் நல்லதைக் கேட்பதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)*

**S.H. வஸீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

எவ்வாறிருப்பினும், **1950** –ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அவரை நீங்கள் Air Force –க்குச் செல்லலாம் என்று கூறினார்கள். **1965** வரை அன்னார் Air Force –ல் வேலை செய்தார்கள். Wing Commander என்ற பொறுப்பு வரை வகித்தார்கள். இந்த காலத்தில் சில Courses –ம் படித்தார்கள். இங்கிலாந்திலும் சில Courses படித்தார்கள். **1960–63** வரை கொயிட்டாவில் Army Command and Staff கல்லூரியில் இன்ஸ்பெக்டராக இருந்தார்கள். War Planning –ன் இன்சார்ஜ் ஆகவும் இருந்தார்கள். **1953** –ல் ஒரு Course படிப்பதற்காக இங்கு வந்திருந்தார்கள். Training –ற்காக வந்தார்கள். அப்போது இங்கு கண்ணியத்திற்குரிய சவுத்ரி ஸஹூர் பாஜ்வா சாஹிப் இங்கு மிஷனரியாக இருந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: எனது Training –ஐ முழுமைப்படுத்திய பிறகு நான் திரும்புவதற்கு சில நாட்கள் எஞ்சியிருக்கும் போது பாஜ்வா சாஹிபுடன் சேர்ந்து மிஷன் ஹவுஸில் தங்கியிருந்தேன். அப்போது பாஜ்வா சாஹிப் மூலம் கர்னல் டக்ளஸ் சாஹிபைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. பாஜ்வா சாஹிப் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அவர் கூறுகிறார்: கர்னல் டக்ளஸ் சாஹிபிடம் நான் சென்றபோது நான் அவரிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட கொலை வழக்கு பற்றிக் கேட்டேன். அப்போது அவர் என்னிடம் கூறினார். நான் குர்தாஸ்பூரில் Deputy Commissioner ஆக இருந்தேன். கொலை வழக்கு என்னிடம் கொண்டு வரப்பட்ட சம்பவம் நடப்பதற்கு முன் அதற்கு சில வருடம் முன்பு நடந்த ஒரு சம்பத்திலிருந்து நான் ஆரம்பிக்கிறேன் என்று டக்ளஸ் சாஹிப் கூறினார்.

அவர் கூறுகிறார்: அப்போது நான் பட்டாலாவின் அஸிஸ்டெண்ட் கமிஷனராக இருந்தேன். ஒருநாள் அமிர்தசரஸில் இருந்து பட்டாலா திரும்பிக் கொண்டிருந்தேன். இதுவும் ஒரு வரலாற்றுச் சம்பவமாகும். கடைசிப் பெட்டியிலுள்ள முதல் வகுப்பில் அவர் பயணம் செய்தார். அமிர்தசரஸிலிருந்து புறப்படும் முன் குர்தாஸ்பூரின் துணை கமிஷனரிடமிருந்து எனக்கு ஒரு தூதுச் செய்தி வந்தது. நான் உம்மிடம் ஒரு முக்கிய செய்தி கூற வேண்டும். எனவே நான் உம்மை பட்டாலா இரயில் நிலையத்தில் சந்திப்பேன் என்பதே அந்த தூதுச் செய்தி.

கர்னல் டக்ளஸ் கூறுகிறார்: இரயில் பட்டாலா வந்தடைந்ததும் துணை கமிஷனர் குர்தாஸ்பூர் ஸ்டேஷனில் இல்லை. ஒருவேளை இரயிலின் முதல் பெட்டியிலுள்ள முதல் வகுப்பு போகியில் அவர் என்னை தேடிக் கொண்டிருப்பாரோ என்று எண்ணியவாறு நான் விரைவாக இரயிலிருந்து இறங்கி நடைமேடையில் வேகமாக நடந்து முன் பெட்டியை நோக்கி நடந்தேன்.

பிறகு கர்னல் டக்ளஸ் கூறினார்: நான் நடைமேடையில் இரண்டு பங்கு தூரத்தைக் கடந்ததும் நான் என்னை பார்த்தேன் எனில் எதிர் புறமிருந்து ஒரு மனிதர் வந்து கொண்டிருந்தார். அவரது பார்வை கீழ் நோக்கி இருந்தது. ஒளி பொருந்திய முகம். எனது மூளையும் உள்ளமும் ஆட்டம் கண்டு விடும் அளவுக்கு அந்த முகத்தில் ஓர் ஈர்ப்பு இருந்தது.

கர்னல் சாஹிப் கூறுகிறார்: இம்மனிதருக்கு உலகத்துடன் எந்த ஈர்ப்பும் இல்லாதது போன்று இருந்தார். மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தார். அந்த ஒளி பொருந்திய முகத்திலிருந்து எனது பார்வையைத் திருப்புவது என்னால் இயலாத காரியமாக இருந்தது. எனவே நான் தொடர்ந்து அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் என்னை விட்டு கடந்து சென்று விட்டார். நான் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது சிறிதாக பார்வையை விட்டு மறையத் தொடங்கியதும் நான் பின்வாக்கில் நடந்து போகத் தொடங்கினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்ற பக்கத்தை நோக்கிப் போகிறார்கள். இவர் அவர்களைப் பார்ப்பதற்காக அன்னாரின் முகத்தைப் பார்த்துக் கொண்டே பின்புறமாக நடந்து செல்லத் தொடங்கினார். அம்மனிதரைப் பார்த்துக் கொண்டே இருப்பதற்காக அவ்வாறு செய்ததாக கூறுகிறார்.

அவர் கூறுகிறார்: இந்நிலையில் இந்தியராக இருந்த அந்த அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டரும் கொடியை எடுத்துக் கொண்டு வந்து விட்டார். நான் பின்னோக்கி நடந்து அவர் மீது மோதி விட்டேன். அவர் என்னைப் பார்க்காததால் கீழே விழுந்து விட்டார். தவறோ என்னுடையது. அப்போது ஆங்கிலேயரின் ஆட்சி நடந்தது. அந்த அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டர் என்னிடம் மன்னிப்புக் கேட்டார். தவறு உம்முடையதல்ல; என்னுடையது என்றேன். எவ்வாறிருப்பனும் அவரிடம் நான் கேட்டேன். இதோ போகிறாரே இவர் யார்? எனக்கு அதை கூறும் என்றேன். அந்த ஸ்டேஷன் மாஸ்டர் கூறினார். உங்களுக்குத் தெரியாதா? இவர்கள் காதியானின் மிர்ஸா சாஹிப் ஆவார்கள். நான் மிகவும் உணர்வுகளுக்கு ஆளாகி விட்டேன். அத்தகைய ஒளி பொருந்திய முகத்தை என் வாழ்நாளிலேயே பார்த்ததில்லை. அந்த தாக்கம் எனக்கு நீண்ட காலம் இருந்தது. பிறகு சிறிது சிறிதாக மறந்து விட்டது. பிறகு நான் நீதிபதியாக நியமிக்கப்பட்டு வந்தபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஃபைபல் என்னிடம் வந்தது. அந்த கேஸ் மிகவும் சரியான முறையில் உருவாக்கப்பட்டிருந்தது. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எந்நிலையிலும் தண்டனை தரவே வேண்டியது ஏற்படும். ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் காதியானைச் சார்ந்த மிர்ஸா குலாம் அஹ்மது என்று நான் படித்ததும் எனக்கு தூக்கி வாரிப் போட்டது. சில வருடம் முன்பு நடந்த சம்பவம் முற்றிலும் நினைவுக்கு வந்தது. சில வருடம் முன்பு பட்டாலாவில் நான் பார்த்த அந்த முகத்தை உடையவர் இந்த வேலையையும் செய்திருப்பார் என்று என்னால் நினைக்க முடியவில்லை.

இன்னும் சொல்வதாயின், சிந்திக்கக் கூட முடியவில்லை. நான் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளானேன். பலமுறை அந்த ஃபைலில் தவறு கண்டுபிடிக்க முயற்சி செய்தேன்; முடியவில்லை. இந்நிலையில் நான் ஆங்கிலேய D.S.P –ஐ அழைத்தேன். அவருடன் கேஸ் சம்பந்தமாக ஆலோசனை செய்வதற்காக அழைத்தேன். D.S.P இடம் கேட்டேன். நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொலை செய்வதற்காக ஏவிய அந்த அப்துல் ஹமீது என்ற மனிதர் போலீஸின் கட்டுப்பாட்டில் இருக்கிறாரா? சர்ச்சின் ஆதிக்கத்தில் இருக்கிறாரா? இந்த கேள்வியைக் கேட்டதும் அந்த ஆங்கிலேயே D.S.P –க்கு போலீஸ் செய்த பெரும் தவறு பற்றிய உணர்வு ஏற்பட்டது. ஏனெனில் போலீஸ் அப்துல் ஹமீதை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்காமல் சர்ச்சிடமே வைத்துக் கொள்ள விட்டு விட்டார்கள். எனவே உடனே இதோ வருகிறேன் என்று ஓடிப் போய் விட்டு, சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த ஆங்கிலேய D.S.P திரும்பி வந்தார்.

அவர் கூறினார்: ஒரு தவறு நடந்து விட்டது. அப்துல் ஹமீதை சர்ச்சிலேயே தங்கி இருப்பதற்கு விட்டு விட்டேன் என்றார். இப்போது நான் அவரை என் ஆதிக்கத்தில் எடுத்து வைத்து விட்டேன். கேஸ் முற்றிலும் பொய்யானது. சர்ச்சிலிருந்து பணம் வாங்கும் ஆசையில் இந்த கதையைக் கட்டியுள்ளதாக அவர் ஒப்புக் கொண்டு விட்டார். இந்த வகையில் கேஸ் நடந்தது. நான் எல்லா சாட்சியங்களையும் கேட்ட பிறகு ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபை கேஸிலிருந்து கண்ணியத்துடன் விடுவித்தேன். தீர்ப்பு கூறிய பிறகு மிர்ஸா சாஹிபிடம் பொய்யான வழக்கு தொடர்ந்தவர்கள் மீது இழப்பீடு உரிமை கோரி வழக்கு போடலாம் என்று கூறினேன். அன்னார் கூறி விட்டார்கள்: இல்லை எனது வழக்கு அல்லாஹ்விடம் உள்ளது. எனவே அவர்களிடமிருந்து எவ்வித இழப்பீடும்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

வேண்டாம் என்று அவர்கள் கூறினார்கள். (அல் ஃபஸ்ல் 28 ஆகஸ்டு 2010 பக்கம் 3-5; 27 ஆகஸ்டு 2010 3-4; 30 ஆகஸ்டு 2010 பக்கம் 5; 18 மே 2009 பக்கம் 3-4)

இந்த இரண்டு வரலாற்றுச் சம்பவங்களை இவர்கள் கூறியுள்ளார்கள். ஒன்று நாடு பிரிவினையின்போது பொருள்களைக் கொண்டு வந்தது. இரண்டாவது கர்னல் டக்ளஸின் சம்பவம். மற்ற சம்பவங்கள் ஏற்கனவே கூறப்பட்டவையே. ஆனால் இதனை மிகவும் குறைவானவர்களே கேட்டிருப்பார்கள்; படித்திருப்பார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று இவர்கள் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிபுடைய மூத்த மகனாக இருந்தார்கள். இந்த வகையில் கிலாஃபத் தேர்வுக் குழுவிலும், சஹாபியின் மூத்த மகன் என்ற அடிப்படையில் பங்கு பெற்றிருந்தார்கள். மூன்றாவது நான்காவது ஐந்தாவது கிலாஃபத்துகளின் கிலாஃபத் தேர்வுக் குழுவில் இருந்தார்கள். அன்னார் இதையே கூறினார்கள். தேர்வின்போது வருகிற உணர்வுகளை வைத்து நான் சாட்சி கூறுகிறேன். கிலாஃபத் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து கிடைக்கிறது. ஏனெனில் மனிதன் சில வேளைகளில் வேறு ஒன்றை சிந்திக்கிறான். ஆனால் அல்லாஹ் யாரை கலீஃபாவாக ஆக்க விரும்புகிறானோ அவரை நோக்கி தூண்டுதலை உருவாக்கி விடுகிறான்.

மிகவும் நல்லவர்; துஆ செய்பவர். ஆனால் மிகவும் மவுனமாக துஆ செய்பவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பேரன்பு இருந்தது. அதனைப் பற்றி இவரது மகள் எழுதுகிறார்: அல்லாஹ் மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஆழமான அன்பு இருந்தது. என்னிடம் இதனையே தினமும் கூறுவார்கள். அல்லாஹ்வின் மகத்துவத்தை எப்போதும் உணர முயற்சி செய்யுங்கள். வெறும் சடங்கான இபாதத்தால் பயனில்லை.

பிறகு அவர் எழுதுகிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தூய வாழ்வை வாசித்து அன்னார் கண்ணீர் விடுவார்கள். உள்ளத்து அன்புடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்வின் பல அம்சங்களைக் குறிப்பிடுவார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: உலக விஷயங்களைப் பொருத்த வரையில் அவர்கள் ஒரு சிறந்த நீச்சல்காரராகவும் விளங்கினார்கள். எப்போதும் அல்லாஹ்வின் திக்ரை கவனத்தில் கொள்வார்கள். தந்தை என்ற முறையில் மிகவும் பரிவுள்ளவர். எல்லா குழந்தைகளையும் கவனத்தில் கொண்டார்கள். குழந்தைகளுக்குப் புரிய வைத்து வந்தார். கிலாஃபத்துடன் ஆழிய தொடர்பிருந்தது. என்னுடனும் கிலாஃபத்திற்குப் பிறகு சிறப்பான தொடர்பு வைத்தார்கள். தொடர்பை அதிகரிக்கவும் செய்தார். சிறப்பான பற்றை வெளிப்படுத்தினார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. அவரது பாவங்களை மன்னிக்கின்ற நடைமுறையைக் காட்டுவானாக. இவரது பிள்ளைகளையும் இவரது நன்மைகளில் நிலை நிற்க வாய்ப்பு வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா கண்ணியத்திற்குரிய மஹ்மூதா பேகம் சாஹிபா உடையதாகும். இவர் சவுத்ரி முஹம்மது ஸித்தீக் சாஹிப் பட்டி உடைய மனைவியாவார். இவர் நமது நைஜரின் முபல்லிக் ஆக இருந்த அஸ்கர் அலி பட்டி சாஹிபின் தாயார் ஆவார். இவர் 16 ஜூலை அன்று தமது 73 –வது வயதில் வஃபாத்தானார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவரது தந்தை வழிப் பாட்டனார் சவுத்ரி சர்வர் கான் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட நிலையில் இவரது குடும்பத்தில் 1928 – ல் அஹ்மதிய்யத் வந்தது.

இவரது மகன் எழுதுகிறார்: அன்னார் செலவு செய்வதில் மிகவும் கவனத்துடன் இருப்பார்கள். எளிமை மற்றும் பணிவு இருந்தது. திகில் நிறைந்த தோற்றமுள்ள பெண்ணாக இருந்தார்கள். வாழ்நாள் முழுவதும் பொறுமை மற்றும் துஆவுடன் கழிந்தது. கிலாஃபத்துடன் அளவு கடந்த பிரியம் இருந்தது. ஜமாஅத் பணிகளில் சுறுசுறுப்பாக பங்கேற்பவராக இருந்தார்கள். மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்த இவர்களுக்கு பெண்மணி தொழுகை மற்றும் திருக்குர்ஆனின் மீது பேரன்பு இருந்தது. 3.00 மணிக்கு தவறாமல் தஹஜ்ஜுதிற்காக எழுந்து விடுவார். தஹஜ்ஜுத் தொழுகையை திருமணத்திற்கு முன்பாக ஆரம்பித்தேன். சோம்பலினால் தஹஜ்ஜுத் தொழுகையை ஒருபோதும் விட்டதாக நினைவில் இல்லை என்று கூறுவார். காலை உணவுக்கான வேலையிலிருந்து விரைவாக வெளியேறி இஷ்ராக் தொழுகைக்காக நிற்பார். இவரது கணவர் 28 வருடம் ஜமாஅத்தின் தலைவராக இருந்தார். வரக்கூடிய மக்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். மகனின் பொருளாதார நிலை நன்றாக இல்லாத நிலையிலும் ஏழைகளுக்கு உதவியும் செய்து வந்தார். பொருளாதார நெருக்கடி, கஷ்டம் என்று வரும்போது தொழ ஆரம்பித்து விடுவார். கஷ்ட காலத்திலும் பிள்ளைகளுக்கு கல்வி கிடைக்கச் செய்தார். கல்விக்காக தமது கால்நடைகளையும் நகைகளையும் விற்று விட்டார். தமது சகோதரர்கள் மற்றும் பெற்றோர்களின் மரணத்தைச் சகித்துக் கொள்ள வேண்டியது வந்தது. இருந்தும் எந்த முறையீடும் செய்ததில்லை. இவரது இரண்டு பேத்திகள் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹூமா வஸிய்யத் செய்தவர். தமது நினைவாக இவர்கள் கணவருடன் இரண்டு மகள்கள் 6 மகன்களை விட்டுச் சென்றுள்ளார். நான் ஏற்கனவே கூறியது போன்று நைஜரில் இவர்களது மகனான அஸ்கர் அலி பட்டி சாஹிப் மிஷனரியாக உள்ளார். தப்லீக் பணிகளில் மூழ்கி இருந்ததால் இவரால் ஜனாஸாவில் பங்கு பெற முடியவில்லை. அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக. இவரது பிள்ளைகளுக்காக செய்த எல்லா துஆக்களையும் ஒப்புக் கொள்வானாக. பிள்ளைகளையும் கூட இவரது நன்மைகளை தொடர வைப்பானாக.

★ ★ ★ ★ ★

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

Classic Mobile's & Watch,
Hiba watch & Mobiles
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**திருக்குர்ஆனிலிருந்து...**

உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)

**முஹம்மது ஆதில்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.

**அட்வகேட் ஸலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**உலகிலுள்ள வல்லரசுகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நீதியுடன் நடந்து கொண்டிருந்தால் இன்று நமக்கு இந்தக் குழப்பங்களை எதிர் கொள்ள வேண்டியது வந்திருக்காது. தாயிஷ் தீவிரவாதப் பிரிவும், சிரியா மற்றும் ஈரானிலுள்ள தீவிரவாதப் பிரிவுகளும் தோன்றி இருக்காது.**

**உலகிலுள்ள சில வல்லரசுகள் அமைதியை நிலைநாட்டுவதற்கு தனது பங்களிப்பைச் செலுத்தவில்லை. மாறாக, அவை எத்தகைய நுட்பமான செயல்முறைகளைக் கடைபிடித்தனவென்றால் அவற்றில் சுயமே அவற்றிற்குத்தான் பலன் இருக்கின்றது என்பதை வேதனையுடன் கூற வேண்டியது இருக்கின்றது.**

# கனடா பாராளுமன்றத்தில் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது வரலாற்றுச் சிறப்புமிக்க எழுச்சி உரை

*17 அக்டோபர் 2016 அன்று ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கனடாவின் பாராளுமன்றமான Parliment Hill -ற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்களுக்கு பாராளுமன்றத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் பல்வேறு உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஹுஸூர் அவர்களைச் சந்தித்தனர். உலகின் நிலைமைகள் தொடர்பாகவும் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாகவும் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சொற்பொழிவை ஹுஸூர் அவர்கள் நிகழ்த்தினார்கள். ஹுஸூர் அவர்களின் இந்த சொற்பொழிவை ஆலிம்களும், அரசியல்வாதிகளும் வாழ்வின் பல்வேறு துறைகளுடன் தொடர்புள்ளவர்களும் மிகவும் விரும்பினர். தங்களது சிறந்த தாக்கங்களை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஹுஸூர் அவர்களின் இன்றைய அலுவல்கள் ஈமானுக்கு மிகவும் எழுச்சியூட்டக்கூடியதாக இருக்கின்றது. இதைப் பற்றிய விபரங்கள் வாசகர்களின் பயனைக் கருத்தில் கொண்டவாறு இனி வரும் இதழ்களில் வெளியிடப்படும்.*

## ஏழாம் பாகம்

**(ஹுஸூர் அவர்களின் உரையின் தொடர்ச்சி...)**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நாம் முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியில் தற்போது நிலவி வருகின்ற தற்போதைய சண்டைகளை ஆய்வு செய்து பார்த்தால் அநீதியிழைப்பவருக்கு எதிராக ஒன்றிணைந்து செயல்படுகின்ற வழிமுறையை அவர்கள் புறக்கணித்து விட்டனர் என்ற முடிவுக்கு நாம் வர வேண்டியது இருக்கின்றது. பக்கத்திலுள்ள நாடுகள் தமது சுய பலன்களைப் பின்னால் தூக்கி எறிந்து விட்டு ஒருதலைபட்சமாக நடந்து கொள்ளாமல் சண்டையிடுகின்ற நாடுகளுக்கு இடையில் தலையிட்டிருந்தால் மிக நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைத்திருக்கும். எனவே, தற்போது நாடுகள் மட்டும் காரணம் அல்ல. மாறாக, நமது இந்த உலகளாவிய நகரத்தில் வசித்து வருகின்ற ஏனைய நாடுகளுக்கும் கூட இந்த அமைதியின்மையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக, சில மேற்கத்திய நாடுகளின் பார்வை எப்போதும் அரபு நாடுகளில் இருக்கின்ற எண்ணெய்களின் கருவூலங்கள் மீது இருக்கின்றது. இந்த விஷயம் மிக நீண்ட காலக்கட்டமாக அவர்களின் பாலிஸிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. இதன் விளைவாக இந்த நாடுகள் சாத்தியம் உள்ள விளைவுகளைப் புறக்கணித்தவாறு அரபு நாடுகளுக்கு ஆயுதங்களை விற்றுள்ளன.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நான் என்ன கூறுகின்றேனோ அது புதிய விஷயமல்ல; மறைவான விஷயமுமல்ல. மாறாக, இவை தஸ்தாவேஜுகளின் வடிவில் இப்போது இருந்து வருகின்ற உண்மைகள் ஆகும். உதாரணமாக, 2015 ல் Immensity International தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கைக்கேற்ப தஹ்ஹாயிகள் அச்சமின்றி அபாயத்தைப் பொருட்படுத்தாமல் செய்து வந்த ஆயுத வியாபாரமானது தாயிஷ் தீவிரவாதிகளின் தீவிரவாத செயல்களுககு வித்திட்டது. இந்த அறிக்கைக்கேற்ப தாயிஷ் தீவிரவாதிகள் பயன்படுத்தி வருகின்ற பெரும்பாலான ஆயுதங்கள் ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் பயன்படுத்துவதற்காக இருந்தவையாகும். மேலும் Armies Control at Immensity -ஐச் சார்ந்த ஓர் ஆராய்ச்சியாளரான Mr. Petric Velgon அவர்கள் உலகில் புதிதாக தயாரிக்கப்படுகின்ற தாயிஷ்களின் உபயோகத்தில் இருந்து வருகின்ற பல்வேறு வகையான நவீன ஆயுதங்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளாமல் செய்யப்பட்ட ஆயுத வியாபாரமானது எந்த அளவு பெரிய அளவில் அநீதிக்குக் காரணமாக ஆகியிருக்கின்றது என்பதற்கான தெளிவான உதாரணமாகும் என்று கூறியுள்ளார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

முஸ்லிம் நாடுகளிடம் மத்தியக் கிழக்கு நாடுகளில் இத்தகைய நவீன ஆயுதங்களை உருவாக்குகின்ற பெரிய தொழிற்சாலைகள் இல்லை என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். முஸ்லிம் உலகில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போர்க்கால பொருள்களின் ஒரு பெரும் பகுதி வெளியிலிருந்து வரவழைக்கப்படுகின்றது. வல்லரசுகள் ஆயுதங்களை வாங்குவதையும் விற்பதையும் நிறுத்தி விட்டால் போரில் கலந்து கொள்கின்ற அரசாங்கங்கள் கிளர்ச்சியாளர்கள் மற்றும் தீவிரவாதிகளுக்கு அனுப்பப்படுகின்ற Supply line துண்டிக்கப்பட்டு விட்டால் இதுபோன்ற மோதல்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர முடியும். சவூதி அரேபியா யமனுக்கு எதிராக போரில் மேற்கத்திய நாடுகளிலிருந்து வாங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றது. அதனால் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான அப்பாவி குடிமக்கள் கொல்லப்படுகின்றனர். மேலும் இதனால் பேரழிவுகள் ஏற்படுகின்றன. இறுதியில் இதுபோன்ற ஆயுத வியாபாரத்தால் என்ன விளைவு ஏற்படும்? யமனிலுள்ள மக்களின் வாழ்க்கையும் எதிர்காலமும் அழிக்கப்படுகின்றது. இதனால் அம்மக்களிடம் வெறுப்பு மட்டும் உருவாகாது. மாறாக, அவர்கள் சவூதி அரேபியாவைப் பழிவாங்குவர். அது மட்டும் அல்லாமல் அம்மக்கள் சவூதி அரேபியாவிற்கு ஆயுதங்களை வழங்குபவர்களுக்கு எதிராகவும் பொதுவாக மேற்கத்திய நாடுகளுக்கு


### திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

93600 05888
78716 00664

**IBR**
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

### திருக்குர்ஆனிலிருந்து...

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

எதிராகவும் வெறுப்படைந்து விடுவர். அவர்களது இளைய தலைமுறையினரிடம் எதிர்காலம் தொடர்பான எந்தவொரு நம்பிக்கையும் இருக்காது. அந்த அளவு இளைஞர்கள் தீவிரவாதத்தின் பக்கம் சாய்ந்து விடுவர். இவ்வாறு தீவிரவாதம் மற்றும் வன்முறையின் அச்சத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு காலக்கட்டம் ஆரம்பமாகி விடும். அழிவை ஏற்படுத்தக்கூடிய கொடூரமான விளைவு-களுக்கு எதிரில் சில கோடி டாலர்களுக்கு என்ன தகுதி இருக்கின்றது?

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இன்று இது முஸ்லிம் நாடுகளுக்கு மட்டும் அபாயகரமான விஷயம் அல்ல. இந்த முஸ்லிம் நாடுகள் இப்போது உலகிலுள்ள குழப்பங்களுக்கு தலைமையகமாக விளங்குகின்றது. மாறாக இதன் வட்டம் இதை விட பல மடங்கு அதிகமாகும். இதை நாம் பாரிஸ், பிரேசில் மற்றும் அமெரிக்காவில் தற்போது நடைபெற்ற தீவிரவாத தாக்குதல்களில் பார்த்து விட்டோம்.

இவ்வாறே கனடாவிலும் கடந்த இரண்டு வருடங்களில் சிறிய அளவில் தீவிரவாத சம்பவங்கள் நம் கண் முன்னால் வந்திருக்கின்றன. இதனை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். சந்தேகமின்றி அரபு நாடுகள் கனடாவிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. ஆனால் அவ்வாறிருந்தும் கூட முஸ்லிம் இளைஞர்கள் இங்கிருந்து புறப்பட்டு தீவிரவாதப் பிரிவுகளில் இணைவதற்காக சிரியாவிற்கும் ஈராக்கிற்கும் சென்று சேர்ந்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக அபாயகரமான விஷயம் என்னவென்றால் கனடா அரசு வெளியிட்டுள்ள புள்ளி விபரங்-களுக்கு ஏற்ப சிரியாவிற்கு ஈராக்கிற்கும் சென்றவர்களில் 20 சதவீகிதம் பேர் பெண்கள் ஆவர். பெண்கள் மட்டும் சுயமே தீவிரவாதத்திற்கு இரையாகவில்லை. மாறாக அந்த பெண்கள் தங்களது குழந்தைகளின் மூளைகளில் கூட விஷத்தை நிரப்பி விடுவர் என்பதே இதிலிருந்து தெரிய வருகின்றது. இந்த தீவிரவாதத்தையும் வன்முறையையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நாம் இதற்கான காரணங்களையும் அடையாளங்களையும் ஆய்வு செய்து பார்க்க வேண்டியது அவசியமானதாகும். மேற்கத்திய நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம்களில் பெரும்பாலாருக்கு உண்மையான இஸ்லாத்தை பற்றிய அறிவே இல்லை அல்லது இஸ்லாமிய போதனைகளை பற்றிய அடிப்படையான அறிவு அவர்களிடம் இல்லை. எனவே, அவர்களது இந்த தீவிரவாதம் ஏதாவதொரு கொள்கை அல்லது கருத்தின் காரணமாக உருவானதல்ல. மாறாக, சில விஷயங்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் போனதாலும் அவர்கள் இழப்பிற்கு ஆளாததன் காரணமாகவும் அது அவர்களிடம் உருவாகி இருக்கின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எனது கருத்தின்படி Online Radicalisation (ஆன்லைன் தீவிரவாதம்) அல்லது பள்ளிவாயில்களில் வெறுப்பை ஏற்படுத்தக் கூடிய போதனைகளைக் கூறுவது அல்லது தீவிரவாதத்தைப் பரப்புகின்ற நூல்களை விநியோகம் செய்வது ஆகியவற்றைத் தவிர மேற்கில் வசிக்கின்ற முஸ்லிம் இளைஞர்கள் தீவிரவாதத்தைக் கடைபிடிப்பதற்கான ஒரு மிகப் பெரிய காரணம் பொருளாதார வீழ்ச்சியுமாகும். வெளியிடப்பட்டுள்ள பல அறிக்கைகளும் இந்த விஷயத்தை உறுதிபடுத்தியிருக்கின்றது. முஸ்லிம் இளைஞர்களில் ஒரு பெரும் எண்ணிக்கை படித்து பட்டம் பெற்றவர்களாக இருக்கின்றனர். ஆனால், கல்வி கற்றிருந்தும் கூட அவர்களுக்கு பொருத்தமான வேலைகள் கிடைக்கவில்லை. அதன் காரணமாக முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் இருந்தனர். எனவே, அவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதாரத் துன்பங்களின் காரணமாக தீவிரவாதத்தை விரும்புகின்ற மவ்லவிமார்கள் மற்றும் தீவிரவாத அமைப்புகளில் இணைபவர்கள் ஆகியோரது கைகளில் எளிதாக இரையாகக் கூடியவர்களாக அவர்கள் ஆகி விடுவர். எனவே இளைஞர்களின் சிறப்பான நிலைமைகளுக்கான சந்தர்ப்பங்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

*(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)*

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்-றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்-களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....*

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
▸ Panchagavya
▸ Pest Repeller
▸ See Veed Extract
▸ All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்-களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

உருவாக்கப்பட்டால் மேலும் அவர்களுக்கு வேலைகள் கிடைத்து விட்டால் பிறகு அவர்கள் நாட்டை அமைதி நிறைந்ததாகவும், பாதுகாப்பு நிறைந்ததாகவும் ஆக்குவதற்குரிய வழியாக ஆகிவிடுவர்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

உலகளாவிய அளவில் வல்லரசுகளும் ஐக்கிய நாட்டு சபை போன்ற பொருளாதாரத் துறைகளும் எல்லா நிலையிலும் தங்களது அடிப்படைக் கொள்கைகளுக்கு ஏற்ப உண்மையான முறையில் செயல்பட்டிருந்தால் நாம் உலகின் பெரும்பாலான பகுதிகளில் தீவிரவாதம் என்ற அழிவை ஏற்படுத்தக்கூடிய நோயைப் பார்க்காமல் இருந்திருப்போம். தொடர்ச்சியாக உலகில் அமைதியும் பாதுகாப்பும் அழிக்கப்பட்டிருக்காது. ஐரோப்பாவிலும் ஏனைய முன்னேற்றமடைந்த நாடுகளிலுள்ள மக்களிடையே அச்சத்தையும் பீதியையும் பரப்புகின்ற அகதிகள் தொடர்பாக கடுமையான பிரச்சனையையும் நாம் பார்க்க வேண்டியது வந்திருக்காது. இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் ஓடி வந்து ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களில் ஆயிரக்கணக்கான மக்கள் அந்த தீவிரவாத பிரிவுகளிடமிருந்து தப்பி இங்கு கனடாவிற்கு வந்துள்ளனர். அவர்கள் இந்த நாடுகளை விஷம் நிறைந்தவையாக ஆக்கி விட்டனர். இவ்வாறு அடைக்கலம் புகுந்துள்ள இவர்களில் அதிகமானோர் நல்ல மக்களாக இருந்தாலும் நாம் தற்போது ஐரோப்பாவிலும் ஓரளவு இங்கு வட அமெரிக்காவிலும் பார்த்தது போன்று ஒன்றிரண்டு எதிர்மறையான சம்பவங்களும் கூட இந்த நாடுகளில் அச்சத்தையும் பீதியையும் பரப்புவதற்குப் போதுமானதாக இருந்தது. உலகில் எத்தகு அமைதியற்ற நிலை நிலவி வருகின்றது என்பதை நாம் நமது கண்களால் பார்க்கின்றோம். எவ்வாறு வெறுப்பும் அமைதியின்மையும் உலகிலுள்ள பெரும்பாலான பகுதிகளில் பரவியிருக்கின்றது என்பதையும் நாம் பார்க்கின்றோம். நான் மீண்டும் கூறுகின்றேன். இவற்றிற்கான அடிப்படையான காரணம் நீதியுடன் நடக்காததாகும்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நீதியிலும் நேர்மையிலும் குறைவு ஏற்பட்டதன் காரணமாக உலகளாவிய பொருளாதார நெருக்கடியும் உருவாகி இருக்கின்றது. கடந்த சில வருடங்களாக பணக்காரர் மற்றும் ஏழை ஆகிய இருவருக்கும் இடையிலுள்ள வித்தியாசம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. முன்னேற்றம் அடைந்துள்ள மற்றும் செல்வந்தர்கள் உள்ள சமுதாயங்கள் ஏழை நாடுகளில் தமது பணத்தை முதலீடு செய்துள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், அவர்கள் இந்த நாடுகளின் முன்னேற்றம் என்ற பெயரில் தங்களது சுய பயன்களுக்கே முன்னுரிமை வழங்கியுள்ளனர். முன்னேற்றமடைந்த நாடுகள் ஏழை நாடுகளின் உரிமைகளை அழிப்பதற்கு பகரமாக அவர்களது உரிமைகளைப் பாதுகாத்திருந்தால், மேலும் அவர்களது முன்னேற்றத்திற்காக முயற்சி செய்திருந்தால் அவர்கள் கண்ணியத்துடனும் பெருமையுடனும் தங்களது சொந்தக் கால்களில் நிலைத்து நின்றிருப்பர். இந்த முன்னேற்றமடைந்த நாடுகள் கலப்பற்ற உள்ளத்துடன் ஏழை நாடுகளிலுள்ள மக்களுக்கு உதவி செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நடக்கவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் கூற வேண்டியது இருக்கின்றது.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

திருக்குர்ஆனில் சூரா தாஹாவின் 132 -வது வசனத்தில் “நீங்கள் மற்றவர்களது பொருள் -களையும் செல்வங்களையும் பேராசை நிறைந்த பார்வையுடன் பார்க்காதீர்கள்” என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். முழு உலகமும் இந்த ஒரு கொள்கையின்படி செயல்பட ஆரம்பித்து விட்டால் பிறகு உலகின் பொருளாதார அமைப்பு நீதியிலும் நேர்மையிலும் நிலைபெற்று விடும். கிடைக்கின்ற இலாபங்கள் சமமாகப் பங்கிடப்படும். இந்த சமுதாயங்கள் கூட அல்லாஹ் வழங்கியுள்ள செல்வத்திற்கான கூலியைப் பெறக் கூடியவையாக ஆகி விடும். பேராசையுடன் எப்படியாவது செல்வத்தையும் ஆற்றலையும் பெறுவதற்குப் பகரமாக உலகளாவிய வியாபாரத்தில் ஈடுபட்டவாறு அதன் பின்னணியில் மனித உரிமைகளைச் செலுத்துவதன் பக்கம் அவற்றிற்கு ஆர்வமும் இருக்கும்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இந்த நீதியற்ற நிலையின் உதாரணம் நமக்கு உலகின் அரசியலிலும் கிடைக்கின்றது. சில நாடுகளில் சர்வாதிகாரமும் நீதியுடன் நடந்து கொள்ளாத அரசுகளுமாக இருக்கின்றன. ஆனால், வல்லரசுகள் இவர்களின் அநீதி மற்றும் காட்டுமிராண்டித்தனத்தை முற்றிலும் கண்டும் காணாதது போன்று அந்த நாடுகளுடன் தொடர்பே இல்லாமல் இருந்து வருகின்றன. ஏனென்றால், இந்த அரசுகள் அவற்றிற்குத் துணை போகின்றன. அந்த வல்லரசுகள் பயன்களைப் பெறுவதற்கு இந்த நாடுகள் உதவுகின்றன. மறுபுறம் எந்த

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:பிஸ்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)*

**முஹம்மது ஹுஸைன்**

பழனி

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?*

**S.A. அப்துல் ஹக்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**பீ.ஜே. சுலைமான்**

மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையைக் கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவார்.

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**

மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

நாடுகளின் தலைவர்கள் இந்த வல்லரசு -களுக்கு முன்னால் தலைகுனியவில்லையோ அங்கு நாட்டிற்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் உதவி செய்யப்படுகின்றது. எதுவரையென்றால் இந்த அரசாங்கங்களை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்படுகின்றது. இந்த எல்லா அரசுகளும் தமது மக்களுடன் ஒன்றுபோல் நடந்து கொள்கின்றன என்பதே உண்மை ஆகும். ஆனால், இந்த அளவு வித்தியாசம் மட்டுமே இருக்கின்றது. அதாவது இவற்றில் சில அரசுகள் வல்லரசுகளுக்கு ஒத்துழைக்கின்றன. சில அரசுகள் ஒத்துழைப்பதில்லை. இந்த இரண்டாவது வகையைச் சார்ந்தவர்களில் ஈராக்கும் லிபியாவும் வருகின்றன. இவற்றின் அரசுகள் மேற்கத்திய பாலிஸிகளின் விளைவாக அழிக்கப்பட்டு விட்டன. இவ்வாறே கடந்த சில வருடங்களாக சிரியாவிலும் இதுபோன்ற முயற்சிகள் செய்யப்படுகின்றது.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஈராக் போரில் பங்கு பெறாமல் இருக்க வேண்டும் என்ற கனடாவின் முடிவு சரியானது என்பதை காலம் நிரூபித்து விட்டது. இந்த சண்டைக்கான குறிப்பான நிலைமைகளும் அதனை தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளும் தெளிவாகத் தெரியாமல் இருக்கின்ற வரை சிரியாவில் வான்வெளித் தாக்குதல்களை நடத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற கனடா அரசின் இந்த முடிவுடன் நானும் ஒருமித்த கருத்தை உடையவனாக இருக்கின்றேன்.

பெரிய அளவில் ஐக்கிய நாடுகளின் சபையும் கூட அரசியல், நீதியற்ற நிலை, ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்வது ஆகியவற்றை விட்டும் முற்றிலுமாக விலகி நின்றவாறு உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு தமது பங்களிப்பையும் செலுத்த வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

நான் துஆ செய்கின்றேன். அல்லாஹ் ஐக்கிய நாடுகளின் சபை மற்றும் உலகிலுள்ள ஏனைய சமுதாயங்களுக்கு இதற்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அதன் மூலம் உண்மையான வெகுகாலம் நிலைத்திருக்கின்ற அமைதி உருவாகட்டுமாக. இதைத் தவிர வேறு வழியில்லை. ஏனென்றால், இதே நிலைமைகள் தொடர்ந்து நீடித்தால் பிறகு உலகம் முன்னரே ஓர் உலகப்போரின் வடிவில் நிகழவிருக்கின்ற பேரழிவின் பக்கம் வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது.

அல்லாஹ் இந்த உலகிலுள்ள ஆட்சியாளர்களுக்கும் பாலிஸிகளை வகுப்பவர்களுக்கும் நுட்பமான ஞானத்தை வழங்குவானாக. அதன் மூலமாக நாம் நமது குழந்தைகளுக்கும் வருங்கால தலைமுறை -யினருக்கும் அமைதி மற்றும் மகிழ்ச்சியின் உலகை விட்டுச் செல்பவர்களாக இருப்போமாக. அது அல்லாமல் முற்றிலும் அழிந்து விட்ட பொருளாதார அமைப்பு மற்றும் ஊனமுற்ற குழந்தைகளை விட்டுச் செல்பவர்களாக நாம் இருக்கக் கூடாது.

இறுதியில் மீண்டும் ஒரு முறை இங்கு நீங்கள் எனக்கு அழைப்பு விடுத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி.

ஹுஸூர் அவர்களின் இந்த சொற்பொழிவு 7 மணி 37 நிமிடங்கள் வரை நீடித்தது. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சொற்பொழிவு நிறைவடைந்ததும் அரங்கில் இருந்த எல்லா விருந்தினர்களும் எழுந்து நின்று கை தட்டினர்.

இதற்கு பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்-தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் துஆ செய்தார்கள். இதற்குப் பிறகு இரவு உணவிற்கான நிகழ்ச்சி இருந்தது. எல்லா விருந்தினர்களும் ஹுஸூர் அய்யதஹுல்லா-ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் அமர்ந்து உணவு உண்டனர். உணவிற்குப் பிறகு எல்லா விருந்தினர்களும் ஒன்றன்பின் மற்றொருவராக ஹுஸூர் அவர்களைச் சந்தித்தனர். ஹுஸூர் அவர்களுடன் முஸா..பா செய்யும் நற்பேற்றைப் பெற்றனர். ஹுஸூர் அவர்கள் விருந்தினர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். இந்த விருந்தினர்களுக்கு ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வதற்கான நற்பேறும் கிடைத்தது. சந்திப்புகளின் இந்த தொடர் இரவு 9 மணி வரை நீடித்தது. இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இங்கிருந்து புறப்பட்டு பைத்துன்னஸீர் பள்ளிவாயிலுக்கு வருகை தந்தார்கள். மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜம்அ செய்து தொழுதார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லா-ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், தான் தங்கி இருந்த இடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

---


Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*


**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.



0422-2399980, 4351980
email: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
Metro Zone
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE





276, N.H. Road, Coimbatore - 641 001.



A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.*


**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....*


**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.



M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 24 August 2017 Issue No. 34

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் U.K -வில் நடைபெற்ற 51 -ஆவது ஆண்டு மாநாட்டின் போது 29.07.2017 அன்று பெண்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து...

அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: "நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஒவ்வோர் ஆன்மாவும் நாளைக்(கென்று) என்ன அனுப்பியுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். மேலும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிகின்றான்" (59:19)

இது அல்லாஹ்வின் கட்டளையாகும். இது நம்பிக்கை கொண்ட ஆணுக்கும் நம்பிக்கை கொண்ட பெண்ணுக்கும் ஆகும். மேலும் நிக்காஹ்வின்போது ஓதப்படக் கூடிய வசனங்களில் ஒரு வசனமாகும். இறையச்சத்தின்படி நடந்தவாறு உங்களுடைய செயலைப் பாருங்கள் என நம்பிக்கை கொண்ட ஆணுக்கும் நம்பிக்கை கொண்ட பெண்ணுக்கும் அறிவுரை கூறப்பட்டுள்ளது. இதனை பொருட்படுத்தாதிருத்தல், இதன் முக்கியத்துவம் பற்றிய உணர்வு இல்லாதிருத்தல் ஆகியவையே பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அடிப்படைக் காரணம் எனப் பொதுவாக நாம் பார்க்கின்றோம். அதாவது அல்லாஹ்வும் அவனது தூதரும் நம்மிடமிருந்து என்ன விரும்புகிறார்கள் என்பதைப் பற்றிய அறியாமைதான் அடிப்படைக் காரணமாகும். திருக்குர்ஆன் நமக்கு ஒரு செயல்திட்டமாகும். அதில் நமது வாழ்க்கையை நடத்துவதற்கு என்னென்ன கட்டளைகள் இருக்கின்றன என்பதைப் பற்றிய புரிதலைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்வதில்லை.

எனவே அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் நம்பிக்கையாளர்கள் என்றால் ஆண்களாயினும் பெண்களாயினும் இருவரும் இறையச்சத்தின்படி செயல்பட்டவாறு தமது வாழ்க்கையை நடத்த வேண்டும்; நமது எல்லா செயல்களையும் பார்வையிட வேண்டும் என்ற இந்தக் கொள்கையை எப்போதும் உங்களுக்கு முன்னால் வையுங்கள். மேலும் எப்போதும் நமது நாளையைப் பற்றி, எதிர்காலத்தைப் பற்றி கவலைப்பட வேண்டும். மேலும் நிரந்தரமான கவலை என்பது உலக எதிர்காலத்தைப் பற்றிய கவலை அல்ல; மாறாக, நல்லொழுக்கத்தைப் பற்றிய, ஆன்மீக நல்லொழுக்கத்தைப் பற்றிய கவலையாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீது உண்மையான நம்பிக்கை கொண்டவாறு, அல்லாஹ்வுடன் முழுமையான நன்றியுணர்வு கொண்டவாறு எவ்வாறு இதை நமது வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். இந்த சிந்தனை இருந்தால்தான் நாம் நமது வாழ்வை ஒரு நம்பிக்கையாளரைப் போன்று நடத்துபவர்களாக இருப்போம். மேலும் மறுமையை சரிசெய்பவர்களாகவும் இருப்போம். இந்த உலகம் தற்காலிகமானதாகும். உண்மையான, நிரந்தரமான வாழ்வு மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்வாகும் என்ற இந்த உறுதி நம்பிக்கையில் நாம் இருக்கிறோம் என்றால், இது நமது நம்பிக்கையின் பகுதி என்றால், இவ்வுலகத்தில் செய்யப்படும் நற்செயல்களுக்கான நற்கூலியும் மறுவுலகில் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்குமென்றால், இறைவன் எல்லா ஆற்றல்களின் எஜமானன் ஆவான் என்ற நம்பிக்கையில் நிலைத்திருக்கிறோம் என்றால், இறைவன் மறைவானதையும் பகிரங்கமானதையும் அறிகின்றான் என்ற நம்பிக்கையில் நாம் நிலைத்திருக்கின்றோம் என்றால், அவனுக்கு மறைவான விஷயங்களைப் பற்றியும் ஞானம் இருக்கிறது; அவன் நமது பாதாளம் வரை அறிகின்றான் என்ற நம்பிக்கை இருக்குமென்றால், நீங்கள் உங்களுக்காக எதை முன்னர் அனுப்பியுள்ளீர்கள்? அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நீங்கள் என்ன செயலைச் செய்துள்ளீர்கள்? என்பதை நீங்கள் எப்போதும் கண் முன் நிறுத்துங்கள் என்ற அல்லாஹ்வின் இந்த விஷயத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியது வரும்; இதை நாம் எல்லா நேரமும் நமக்கு முன்னால் வைக்க வேண்டியது வரும். நமது 'நாளை' என்பது வாழ்வின் நாளை அல்லது நமது மரணத்திற்குப் பிறகுள்ள எதிர்காலம் என்பது மட்டும் அல்ல. மாறாக, நமது நாளை என்பது நமது சந்ததிகளும் ஆவார்கள்.

(மொழியாக்கம் : ஆசிரியர், தமிழ் பத்ர் வார இதழ்)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)


பிறகு மவ்லவி சாஹிப் அவர்கள் மூலமாக அந்த மோதிரம் ஐந்து ரூபாய் செலவில் தயார் செய்யப்பட்டு என்னிடம் வந்து சேர்ந்தது. இப்போது வரை அது என்னிடம் இருக்கின்றது..... எங்களது வாழ்வு மற்றும் சுகம் ஆகியவற்றின் முழு அடித்தளமும் எங்களது தந்தையாரின் ஒரு குறுகிய வருமானத்தை மட்டுமே சார்ந்திருந்த அந்தக் காலத்தில் இந்த இல்ஹாம் வந்தது. வெளியிலுள்ள மக்களில் ஒரு நபர் கூட என்னை அறிந்திருக்கவில்லை. காதியான் போன்ற பாழடைந்த கிராமத்தில் எவரும் அறியாத ஒரு மூலையில் இருந்து வந்த எவராலும் அறியப்படாத ஒரு மனிதனாக நான் இருந்தேன்.

இதற்குப் பிறகு இறைவன் தனது முன்னறிவிப்பிற்கேற்ப ஓர் உலகை என் பக்கம் திரும்ப வைத்து விட்டான். மேலும் எத்தகைய தொடர்ச்சியான வெற்றியின் மூலம் அவன் எனக்கு பொருளுதவி செய்தான் என்றால் அதற்கு நன்றி தெரிவிப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. நான் எனது நிலைமையை எண்ணிப் பார்த்தால் மாதந்தோறும் பத்து ரூபாய் கூட வரும் என்ற நம்பிக்கை கூட எனக்கு இல்லாமல் இருந்தது. ஆனால் ஏழைகளை மண்ணிலிருந்து எழச் செய்து ஆணவம் கொண்டவர்களை மண்ணில் புதைத்து விடுகின்ற மேலான இறைவன் என்னை எவ்வாறு வழிநடத்தினான் என்றால் இப்போது வரை ஏறக்குறைய மூன்று இலட்சம் ரூபாய் வந்து விட்டது என்று நிச்சயமாக என்னால் கூற முடியும். ஒருவேளை இதற்கு அதிகமாகவும் வந்திருக்கலாம். இந்த வருவாயை இவ்வாறு நாம் கணக்கிட வேண்டும். அதாவது தோராயமாக கணக்கிட்டுப் பார்க்கும்போது பல வருடங்களாக மாதந்தோறும் உணவகத்திற்காக மட்டும் 1500 ரூபாய் செலவாகின்றது. மேலும் மற்ற கிளைகளான மத்ரஸா போன்றவற்றிற்கும், நூல்களை அச்சிடுவதற்கும் ஏற்படும் செலவுகள் இதை தவிர்த்து உள்ளவையாகும். எனவே اَلَیۡسَ اللّٰہُ بِکَافٍ عَبۡدَہٗ என்ற இந்த முன்னறிவிப்பு எவ்வளவு தெளிவாகவும் வலுவாகவும் மகிமையுடனும் நிறைவேறி இருக்கின்றது என்று பார்க்க வேண்டும். இது இட்டுக்கட்டி பொய் கூறுபவரின் வேலையா என்ன ? அல்லது ஷைத்தானிய சந்தேகங்களா என்ன ? ஒருபோதும் அல்ல. மாறாக, இது எவனது கையில் கண்ணியமும் இழிவும், வீழ்ச்சியும் எழுச்சியும் இருக்கின்றதோ அந்த இறைவனின் பணியாகும். எனது இந்த கூற்றின் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்தால் தபால் துறையின் இருபது வருட கால அரசாங்க பதிவேடுகளைப் பாருங்கள். அதன் மூலம் இந்த முழு காலக்கட்டத்திலும் எந்த அளவு வருவாயிற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வரும். இது தபால் மூலமாக மட்டும் வந்த குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட வருவாயாக இருக்கவில்லை. மாறாக, ஆயிரக்கணக்கான ரூபாய்கள் இவ்வாறே வருவாயாக வந்திருக்கின்றது. அதாவது மக்கள் சுயமே காதியானுக்கு வந்து (இந்த தொகையை) தருகின்றனர். மேலும் கவர்களில் நோட்டுகள் அனுப்பப்படுவதன் மூலமும் வருவாய் வருகின்றது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 219-221)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS
DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic)
Tirunelveli - 627 005.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad